**கொட்டகல பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொட்டகல பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொட்டகல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காயவு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபைக்குரிய இரண்டு காணிகளின் வேலிகளை அபிவிருத்தி செய்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா. 5,755,374 ஆன செலவினம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அச் செலவினம் மூலதனமாக்கப்பட்டி ருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் தயாரிக்கப்படும் நிதிக் கூற்றுக்களின் ஊடாக சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | மூலதனச் செலவினம் கணக்கீடு செய்யப் வேண்டும். |
| (ஆ) சபைக்குரிய சொத்துக்களை மேம்படுத்துவதற்காக ரூபா 4,531,256 முன்னைய ஆண்டில் செலவிடப் பட்டிருந்த போதும் அச் சொத்துக்கள் வருமான பரிசோதகரால் ரூபா 1,775,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டு சொத்துக்களின் பெறுமதி ரூபா 2,756,256 ஆல் குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் தயாரிக்கப்படும் நிதிக் கூற்றுக்களின் ஊடாக சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களின் பெறுமதி கணக்கீடு செய்யப் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த சபைக்குரிய லோவில் தோட்டத்தின் கழிவுப் பொருள் அகற்றும் இடத்தில் அமைந்துள்ள காணியில் ரூபா 59,878,500 பெறுமதி மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில் | 2022 ஆம் ஆண்டில் தயாரிக்கப்படும் நிதிக் கூற்றுக்களின் ஊடாக சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக கணக்கீடு செய்யப் வேண்டும். |
| (ஈ) | நிதிக் கூற்றுக்களில் ரூபா 24,540 ஆன செலவினம் மற்றும் ரூபா 843,456 என பொறுப்புக்களாக 02 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா 867,996 குறைத்து காண்பித்தும் ரூபா 3,266,997 ஆன சொத்துக்கள் மற்றும் ரூபா 917,220 ஆன பொறுப்புக்களாக 02 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா.4,184,217 கூடுதலாகக் காண்பித்தும் காணப்பட்டன. | 2022 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களின் மீதிகள் சரியாக வகைப்படுத்தி கணக்கீடு செய்யப் வேண்டும். |
| (உ) | இயந்திர உபாகரணங்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 8,964,276 ஆன 07 சொத்து விடயங்களின் பெறுமதி அலுவலக உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் தயாரிக்கப்படும் நிதிக் கூற்றுக்களின் ஊடாக சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களின் மீதிகள் சரியாக வகைப்படுத்தி கணக்கீடு செய்யப் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,404,452 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,100,415 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

**(அ) வீதவரியும் வரியும்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| i | புதிய பிரதேச சபையை அமைக்கும் போது 2018 ஆம் ஆண்டின் போது நுவரெலிய பிரதேச சபையிடமிருந்து கையளிக்கப்பட்ட 545 அலகு களுக்காக 742 நபர்களிடமிருந்து | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா 2,247,517 ஆன நிலுவை வீத வரித் தொகை 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| II | 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியொன்று கடந்திருந்த ரூபா 1,930,908 ஆன மீதியொன்றும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக இருந்த ரூபா 1,279,859 ஆன நிலுவை மீதியொன்றுமாக 905 அலகுகளின் 1433 பேரிடமிருந்து மொத்தம் ரூபா 3,210,767 ஆன வீதவரி அறவிடப்படாது இருந்தமையால் வருமான அறவீட்டின் செயலாற்றல் போதுமான மட்டத்தில் காணப்படவில்லை. | 2022 ஆகஸ்ட் 10 ஆந் திகதி வரையில் ரூபா 105,463 தொகை அறவிடப்பட்டிருந்ததாகவும் எஞ்சிய தொகையை தாமதமின்றி அறவிடப்படுமெனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | ஏனைய வருமானம் | | |
| | முன்னைய ஆண்டுக்குரிய ஆறு முச்சக்கரவண்டி நிறுத்துமிடங்களில் 97 முச்சக்கரவண்டிகளுக்காக அறவிடப்பட வேண்டிய கட்டணம் ரூபா.242,500 மற்றும் மீளாய்வாண்டிற்காக முச்சக்கரவண்டி நிறுத்துமிடங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய கட்டணம் எதுவும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | முச்சக்கரவண்டி நிறுத்துமிடங்கள் வீதி அபிவிருத்தி சபைக்குரிய வீதிகளில் அமைந்துள்ளதால் அதற்குரிய அனுமதி ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதுள்ளமையால் இவ்வாறு உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 செயற்திட்டங்கள் பணிகள் அல்லது மூலதன வேலைகளின் தாதமதம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொட்டகல குடா ஓயாவில் அமைந்துள்ள சபைக்குரிய 55 பேர்ச் அளவிலான ஆக்ரில் கொம் காணியைச் சுற்றி வேலி அமைப்பதற்காக | தேவையான பொருட்களைப் பெற்றுக் கொள்வதில் சிக்கல் காணப்பட்டதால் இதுவரை நிர்மாணம் நிறைவேற்றாமையால் 2022 ஒக்தோபர் 15 | தாமதமின்றி நிர்மாண வேலையை நிறைவேற்ற வேண்டும் |

| | | |
|---|---|---|
| ரூபா 398,385 தொகையை ஒப்பந்தக்காரருக்கு 2021 மே 26 ஆம் திகதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2021 ஆகஸ்ட் 26 ஆம் திகதி வரையில் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வுத் திகதியான 2021 ஜனவரி 21 ஆம் திகதி வரை நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை | ஆம் திகதிக்கு முன்னர் நிர்மாணத்தைப் பூர்த்தி செய்து முற்பணத்தைத் தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக 2022 ஆகஸ்ட் 10 ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) 2015 மே 11 ஆம் திகதி ரூபா 83,373,432 செலவில் சபையில் புதிய கட்டிடமொன்று நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அதற்காக ரூபா 21,559,211 ஆன தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் நிர்வாக மற்றும் தொழில்நுட்ப சிக்கல் காரணமாக அதன் வேலைகள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | ஓப்பந்த சங்கத்திற்கு ரூபா. 27 மில்லியன் அளவில் கொடுப்பதற்கு உள்ளதாகவும் அத்தொகையை கொடுப்பதற்காகவும் நிர்மாணத்தை முன்கொண்டு செல்வதற்காகவும் ஒப்பந்தக் கம்பனி, மதியுரை நிறுவனம் உள்ளூராட்சி மன்ற ஆணையாளர், பொறியியல் சேவைகள் பணிப்பாளர் ஆகியோருடன் கலந்துரையாடலொன்றை 2022 ஆகஸ்ட் 19 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டு எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | தாமதமின்றி நிர்மாணத்தின் வேலைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்**

---

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தோட்ட வீடமைப்பு மற்றும் சமுக உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்டிருந்த 03 நிர்மாணங்களுக்காக ரூபா 2,856,631 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்நிர்மாணங்களின் 08 வேலை விடயங்களுக்காக ரூபா 1,370,536 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | குறித்த பணத்தை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுத்து கணக்காய்விற்கு அறிக்கை இடுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கூடுதலாக கொடுப்பனவு செய்த பணத்தை அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மத்திய மாகாண பிரதான செயலாளரின் உள்ளூராட்சி மன்றங்களின் அத்தியவசிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தி 02 நிர்மாணங்களுக்காக ரூபா 1,684,917 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்நிர்மாணங்களின் 06 வேலை விடயங்களுக்காக ரூபா 80,947 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கூடுதலாக கொடுப்பனவு செய்த பணத்தை கழித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து கணக்காய்விற்கு அறிக்கை இடுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கூடுதலாக கொடுப்பனவு செய்த பணத்தை அறவிட வேண்டும். |